

கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி மைதானத்தில் செய்தித்துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் (13.05.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், துணை மேயர் இரா.வெற்றிசெல்வன் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக இருந்த உதயசந்திரன் ஐ.ஏ.எஸ். - நிதித்துறைச் செயலாளராகிறார்!

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

## நிதித்துறைச் செயலாளர் என்.முருகானந்தம் - முதல்வரின் முதன்மைச் செயலாளராக நியமனம்!

சென்னை, மே 15- முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக - நிதித்துறைச் செயலாளராக இருந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக இருந்த உதயசந்திரன் நிதித்துறைச் செயலாளராக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், நிதித்துறைச் செயலாளராக இருந்த முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால்துறை முதன்மை செயலாளராக பி.அமுதாவும், போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக பணீந்திர ரெட்டியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சி ஆணையர் ககன் தீப் சிங் பேடி சுகாதாரத்துறை செயலாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். சென்னை மாநகராட்சி ஆணையராக ராதாகிருஷ்ணன் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். போக்குவரத்துத்துறைச் செயலாளர் கோபால், லஞ்ச ஒழிப்புத்துறை ஆணையராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

சுகாதாரத்துறைச் செயலாளர் செந்தில்குமார் ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

சுற்றுலாத்துறைச் செயலாளர் சந்திரமோகன், பொதுப்பணித்துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை ஆணையராக இருந்த நந்தகுமார், மனிதவள மேலாண்மைத்துறைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர்

# கே.கே.செல்லபாண்டியனின் தந்தை ஆசிரியர் கண்ணன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!

சென்னை, மே 15 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியனின் தந்தையார் - ஆசிரியர் கண்ணன் அவர்கள் நேற்று முன்தினம் மாலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இம் மறைவுச் செய்தியறிந்து துயருற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை - மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் மற்றும் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

# கூவாய் இளங்குயிலே!

ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

போகாயோ? என்றொழிந்துப்
போனபின்பும், மீண்டும்இங்கே
"ஆகாஷ் வாணி"வந்தேன்
அலறுதற்கு நுழைகிறது?
பாகினிய தமிழ்க்கிளையில்
பறந்தமரப் பாயும், இந்திக்
"கூகை"யின்வாய் கிழியும்எனக்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் உணர்வுகளை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் "நீட்"
கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில்இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் திருநாட்டில்
தெருதோறும் எரிமலைகள்
கொந்தளிக்கும்!என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்(து) அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்! எனக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண்ணா, கலைஞர்
அவர்கள்இல்லைஎனும்திமிரா?
தொய்வறியாத் "தளபதி"யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
"இந்திவெறிக் குறிக்கோளைக்"
கொய்(து)எறிவான்
தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத்தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்போம் ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செலமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
"தம்பியர்" பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்




கொம்புடைந்து வீழும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய்
மொழிகாக்கும்
"உதயநிதி ஸ்டாலின்" படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுவார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

" பண்டிதரின் வாக்குறுதி"
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! "தாமரை" யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
"தமிழ்க்கோபம்" ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி "இறையாண்மை"
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
"பன்முகத்தன் மை" போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

தூத்துக்குடி மாவட்டத்தில்

# நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 15- தூத்துக்குடி மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், புதூர் குறுவட்டம், சிவலார்பட்டி கிராமம், தெற்குத் தெருவைச் சேர்ந்த முருகேசன் என்பவரின் மகன்கள் செல்வன். மகேஸ்வரன் (வயது 12), செல்வன். அருண்குமார் (வயது 9) மற்றும் செல்வன். சுதன் த/பெ. கார்த்திகேயன் (வயது 7) ஆகியோர் (12.5.2023) அன்று மாலை சிவலார்பட்டி கண்மாயில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு! நாகை ஒன்றியம் -

# ஐவநல்லூரில் அங்கன்வாடிக் கட்டிடம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

நாகை, மே 15- நாகை மாவட்டம் நாகை ஒன்றியம், ஐவநல்லூரில் அங்கன்வாடி கட்டிடம், அந்தனைபேட்டை ஊராட்சியில் நியாய விலை கடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ஆழியூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அ.அருண்தம்புராஜ் தலைமைத் தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷாநவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தார். வட்டார ஆத்மா குழு தலைவர் சிக்கல் என்.ஆனந்த் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு நாகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஐவநல்லூர் ஊராட்சி சவேரியார் கோயில் தெருவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15 வது மானிய நிதியின் கீழ் ரூ. 11.62லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடம், அந்தணப்பேட்டை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 14.59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள நியாய விலைக் கடை மற்றும் ராஷ்டிய கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் ரூ. 23.56 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் மற்றும் ஆழியூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் என மொத்தம் ரூ. 72,42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள புதிய கட்டங்களை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாநில சுற்றுசூழல் அணி துணைச் செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான ரஞ்சன்துரை, ஒன்றியக் குழு தலைவர் வி.அனுசியா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரபோஜி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார், மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் பொதுமக்களின் நலனை கருதி மகளிருக்கு இலவச பேருந்து பயணம், மக்களைத் தோடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, போன்ற பல்வேறு நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். வருகின்ற செப்டம்பர் 15ம் தேதி 1 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் செயல்படுத்த உள்ளார்கள். நாகை ஒன்றியத்தில் ஐவநல்லூர், அந்தணபேட்டை, ஆழியூர் ஊராட்சிகளில் நியாய விலை கடை, அங்கன்வாடி கட்டிடம், ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டியளித்தார்.

துரைமுருகன் - ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.இராசா- கனிமொழி கருணாநிதி - உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

# தொ.மு.ச. பேரவை பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## கலைவாணர் அரங்கில் மூன்று நாள் நிகழ்ச்சி! மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மே 15 - தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை எல்.பி.எப். யின் பொதுக்குழு மே மாதம் 16, 17 ஆகிய தேதிகளிலும், 18 ஆம் தேதி பொன்விழா மாநாடும் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டினையெட்டி, 18 ஆம் தேதி பேரணி நடைபெறுகிறது. பேரவை பொன்விழா மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்று கிறார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தொ.மு.ச.பேரவை பொன் விழா மாநாடு - 25-வது பொதுக்குழு மே16, 17, 18 ஆகிய தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

16-5-2023 காலை 9 மணிக்கு கொடியேற்றல், காலை 10 மணிக்கு ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி, எம்.எச்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., டி.யு.சி.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு., எம்.எல்.எப்., எல்.எல்.ப்., பி.எஸ்.ஐ. ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றுகின்றனர்.

பிற்பகல் 2 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பொதுக்குழுவை தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆண்டறிக்கையை தாக்கல் செய்கிறார். பொருளாளர் கி.நடராசன் வரவு - செலவு கணக்கு தாக்கல் செய்கிறார்.

**கருத்தரங்கம்!**

மாலை 5 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்தில் "சமூக நீதி" என்ற தலைப்பில் திருச்சி சிவா எம்.பி., 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, 'தொழில் வளர்ச்சி' என்ற தலைப்பில் சி.மகேந்திரன் (சி.பி.ஐ.), 'தொழிலாளர் நலன்' என்ற தலைப்பில் சு.வெங்கடேசன் எம்.பி. (சி.பி.ஐ.) ஆகியோர் பேசுகின்றனர்.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

17-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுக்களின் விவாதம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு தீர்மானங்கள் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

18-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னோடிகள் பேசுகின்றனர்.

மாலை 4 மணிக்கு சுவாமி சிவானந்தா சாலையில் அணிவகித்து நடைபெறும் மாபெரும் பேரணியை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைக்கிறார்.

இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார். மேலும் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் நன்றியுரையாற்றுகிறார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பொ.மல்லாபுரம் பேரூராட்சி அலுவலம் எதிரில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்ற கழக ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கழக சாதனைகளை விளக்கி பேசினார்.கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,தலைமை கழக பேச்சாளர் விக்ரமன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சத்யமூர்த்தி,பொ.மல்லாபுரம் பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன் மற்றும் கழக மாநில,மாவட்ட,ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி பொறுப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக கிளை கழக தொண்டர்கள் மற்றும் 1000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.